1987 ஏப்ரல் 8] [திரு. அ. ரகுமான்கான்]

பரிசீலனை செய்யப்படாமல் இருக்கின்றன. பாதிக்கப்பட்ட பலருடைய வீடுகளுக்கு இன்னும் அதிகாரிகள் வராமல் இருக்கிற காரணத்தால் பல மனுக்கள் பைசல் செய்யப்படாமலேயே இருக்கின்றன. அதன் காரணமாகப் புதிய கார்டுகள் வழங்கப்படாமல் இருக்கின்றன. இந்தக் குறைகள் நீக்கப்பட்டு மனுக்கள் மீது புதிய கார்டுகள் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அப்படிக் குறை இருக்குமானால் நிவர்த்திக்கப்படும்.

(ஆ) மதுரை கோட்ஸ் ஆலைத் தொழிலாளர்கள் குடியிருக்கும் ஹார்விப்பட்டி நகரியத்தின் பராமரிப்புப் பணிகள்.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கோட்ஸ் தொழிலாளர்கள் குடியிருப்பான ஹார்விப்பட்டி நகரியத்தின் குடிநீர், தெருவிளக்கு, சாலை, சாக்கடை ஆகிய அடிப்படை வசதிகளைப் பராமரித்திட, ஒப்பந்தத்தின்படி கடமைப்பட்ட மதுரை கோட்ஸ் மில் நிர்வாகம் கடந்த பல ஆண்டுகளாகப் பராமரிப்புப் பணிகளைச் செய்திடாத காரணத்தால், நகரியத்தில் ஏற்பட்டுள்ள சுகாதாரக் கேடு குறித்தும் அதனால் பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

ஹார்விப்பட்டி என்பது மதுரை கோட்ஸ் லிமிடெட் என்ற நூற்பு ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் குடியிருக்கும் ஒரு நகரியம் ஆகும். இந்த நகரியத்தை செயல் அலுவலர் (Executive Officer) நிர்வகித்து வருகிறார். இந்நகரியத்தைப் பராமரிக்க மதுரை கோட்ஸ் நிர்வாகம் ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் ஏதும் செய்துகொள்ளவில்லை எனவும், ஹார்விப்பட்டி நகரியத்தைப் பஞ்சாயத்தாக மாற்றும்படி மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், அவ்வாறு ஹார்விப்பட்டி நகரியம் பஞ்சாயத்தாக மாற்றப்படும்வரை மதுரை கோட்ஸ்

நிர்வாகம் சில சிறிய பராமரிப்புப் பணிகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், நிர்வாகமும் அவ்வாறே செய்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

2. ஹார்விப்பட்டியில் கட்டப்பட்டுள்ள வீடுகளும், அந்த வீடுகள் எழுப்பப்பட்டிருக்கும் நிலங்களும் மதுரை கோட்ஸ் நிர்வாகத்திற்குச் சொந்தமானவை அல்ல என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை ஹார்வி மில்ஸ் நிர்வாகத்தில் வேலை பார்த்தவர்கள் என்ற வகையில் 1000 பேருக்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்காக ஹார்விப்பட்டி நகரம் உருவாக்கப் பட்டது. ஹார்வி மில்ஸ் தற்போது மதுரை கோட்ஸ் என்ற பெயரில் இயங்கி வருகிறது. இந்த மதுரை கோட்ஸ் நிர்வாகம் ஹார்விபட்டியின் அடிப்படை வசதிகளைக் கவனித்து வந்தது. இன்று கூட தொழிலாளர்கள் நல நிதியிலிருந்து ஹார்விப்பட்டி நகரியத்திற்குச் செலவுக் கணக்கு என்ற வகையிலே ஒரு கணிச மான தொகை நிர்வாகத்தால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்த நிலையில் கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக ஹார்விப்பட்டி நகரியத் திற்கு மதுரா கோட்ஸ் நிர்வாகம் குடிநீர், தெருவிளக்கு, சாலை, சாக்கடை ஆகிய எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் செய்யவில்லை. எனவே இதைக் கவனத்திலே கொண்டு, இந்த ஐந்தாறு வருஷங்களாக பராமரிப்புப் பணிகளைச் செய்யாததன் காரணமாக மதுரா கோட்ஸிடமிருந்து நஷ்டஈடு பெறுவதற்கு அரசு முன்வருமா? மேலும் இனிமேல் எதிர்காலத்திலாவது அரசின் உதவியை இந்த நகரியம் பெறுவதற்கும், அதைப் போலவே பராமரிப்புப் பணிகளை அரசே மேற்கொள்ளுவதற் காக இந்த நகரியத்தை ஊராட்சி மன்றமாக மாற்றவும் அரசு முன் வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நகரியப் பராமரிப்பைப் பொறுத்த வரையில் முதலாளிகளிடம் விட்டால் நலநிதி செலவாகும், நகரியம் செவ்வனே இயங்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் காட்டியிருக்கிறார். ஏற்கெனவே வேலைகளைச் செய்யாமல் பணத்தை அந்த முத லாளிகள் எடுத்துக் கொண்டிருந்தால் அந்தப் பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். ஹார்விப் பட்டியைத் தனி பஞ்சாயத்தாக அல்லது பேரூராட்சியாக ஆக்கு வதைப்பற்றி நிச்சயமாக அரசு பரிசீலிக்கும்.